முன்னாள் உறுப்பினர் ஒருவர் பெயரை பேரவைத் தலைவர் தவறாகக் குறிப்பிட்டதாக 'தினமணி' பத்திரிகை வெளியிட்ட செய்தி குறித்து.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 30

கிளப்பி நேற்றும் நான் இன்றைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரைப் பற்றித் தெரிவிக்கவில்லை என்று மறுத்தேன்.

திரு. வே. தம்புசாமி : தலைவர் அவர்களே, அறிக்கை என்பது நேற்றே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை இன்றைக்கு பத்திரிக்கையில் பிரசுரமாகி இருக்கிறது, உங்களுடைய அறிவிப்பைப் பார்த்தவுடன் மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டது. இரண்டும் வெளியிடப்பட்டிருந்தால் இந்தக் குழப்பத்திற்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லது. திரு. முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இங்கே சொல்கிறார்கள், நமது மாண்புமிகு மேலவையின் உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர். அவர் கிட்டத் தட்ட ஐந்து தடவைகள் அந்தத் தொகுதியில் போட்டியிட்டும் கூட சட்டமன்றத்திற்கு வர முடியாமல் இருந்தவர், எனவே, நல்லசிவம் என்று சொன்னவுடன் எந்த நல்லசிவம் என்று கேட்டேன். ஏனென்றால், சட்டமன்றத்திற்கே வராத, வாய்ப்பு இல்லாத ஒருவர் எப்படி இங்கேயிருந்து சொல்லி இருக்க முடியும் என்று விளக்கத்திற்காக நேற்றே நான் கேட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவரே சொல்கிறார். நான் சட்டமன்றத்திற்குப் போகவில்லை என்று அவரே அதைச் சொல்கிறார்.

6. கவன ஈர்ப்பு.

(அ) இராமநாதபுரம் பரமக்குடி நகராட்சி மேலச்சத்திரம் ஆரம்பப்பள்ளி இடிந்த நிலையில் இருப்பது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு; டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ''பரமக்குடி நகராட்சி மேலச்சத்திரத்திலுள்ள நகராட்சி ஆரம்பப்பள்ளி இடிந்த நிலையில் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை

1993 ஏப்ரல் 30] [டாக்டர் எஸ். சுந்தரராஜ்]

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பரமக்குடி நகராட்சி மேலச்சத்திரத்தில் உள்ள ஆரம்ப நகராட்சிப் பள்ளி தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அக்கட்டிடம் இடிந்த நிலையில் உள்ளதால் மேற்படி பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதி மேலச்சத்திரம் பகுதியில் நகர் மன்றத்திற்கு பாத்தியப்பட்ட காட்டுப் பரமக்குடி கிராமம் புல எண். ஜி.ஆர். 544/24-ல் மனை இடத்தில் நகர்மன்றத் தொடக்கப்பள்ளிக்கூடம் கட்ட திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலச்சத்திரம் பகுதியை சார்ந்த தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் பரமக்குடி நகர்மன்றத் தொடக்கப் பள்ளி மேலச்சத்திரம் (கிளை) மேற்படி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஓட்டுக் கட்டிடம் அமைத்து நகர் மன்றத் தொடக்கப்பள்ளியைத் துவக்க அதற்கான கட்டுமானப் பணியை அவர்களது சொந்தச் செலவில் மேற்கொள்ளவும் அதை நகராட்சிக்கு ஒப்படைக்கவும் அரசாங்கத்திலிருந்து நிரந்தரமாக கட்டிடம் கட்டும் சமயம் மேற்படி ஓட்டுக்கட்டிடத்தை அப்புறப்படுத்திக் கொள்வதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பள்ளிக்கூடக் கட்டுமானத்திற்கு நகரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் வடிவமைப்பு வரைபடமும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது, மேலும் மேற்படி பள்ளிக் கட்டுமானத்திற்கு அனுமதி அளிப்பது சம்பந்தமாக மாவட்டக் கல்வி அலுவலர், பரமக்குடி அவர்களின் ஒப்புதல் கோரியும், நகர்மன்ற வழக்கறிஞர் சட்ட ஆலோசனை கோரியும் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கையில் பரமக்குடி நகராட்சி மேலச்சத்திரத்தில் உள்ள ஆரம்பப்பள்ளி இடிந்த நிலையில் உள்ள வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது, அங்கே கட்டிடம் கட்டுவதற்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் நகராட்சியினுடைய இடமான 540/24-ல் இடம் ஒதுக்கப்பட்டு கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டு

வதற்கு ஜே. வி. வி டி. திட்டத்தில் எடுக்கப்படுகின்றன, ஆனால் நகராட்சிப் பள்ளிக் கட்டிடங்கள்—எங்களுடைய பரமக்குடி நகராட்சியில் கிட்டத்தட்ட இரண்டு நடுநிலைப் பள்ளிகள், ஏழு ஆரம்பப் பள்ளிகள் உள்ளன, இவைகளுக்கு எல்லாம் கட்டிடம் கட்டுவதற்கு எந்தவிதமான அரசு நிதியுதவியும் அளிக்கப்படவில்லை, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய பிறகு இதற்கென்று நிதியொதுக்க முடியாது என்ற இந்தக் கட்டத்தில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த கட்டிடம் கட்டுவதற்கு நிதியொதுக்கித் தர வழிவகுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி நடந்து கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் இவ்வாறு இடிந்த நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பிரச்சினைக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதற்கு வருகிற நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா, நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுக் காலமாக நகராட்சி நிதிநிலைமை போதிய அளவுக்கு அதிகமாகவுள்ள இதுபோன்ற நகராட்சி பள்ளிக் கட்டிடங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் என்று தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி இந்த ஆண்டே இந்தப் பள்ளிக்கூடம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் புள்ளான் விடுதி காகிதத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. எஸ். சண்முகநாதன்,